**MAY 2023** **P/ID 35311/PTL1A**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. பாரதியார் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.

2. பாஞ்சாலி சபதத்தில் இடம்பெற்றுள்ள சருக்கங்களை எழுதுக.

3. வீமன் செய்த சபதம் என்ன?

4. நரிக்கண்ணனின் சூழ்ச்சியினை எழுதுக.

5. வேலனை அறிமுகப்படுத்துக.

6. பேழையின் அடையாளமாக அன்னம் கூறியது யாது?

7. புதுக்கவிதை – பொருளுரைக்க.

8. வள்ளுவரின் எழுத்தாணிக்கு ஆசிரியர் ஆசைப்படக் காரணம் என்ன?

9. வள்ளுவர் கண்ட கனவினை எழுதுக.

10. இராமானுஜரின் ஆசிரியர் பெயரைச் சுட்டுக.

11. திருக்கோட்டியூரில் இராமானுஜர் நிகழ்த்திய உபதேசம் குறித்து எழுதுக.

12. இராமானுஜர் நாடகத்தில் இடம்பெற்றுள்ள எதிர்நிலைப் பாத்திரங்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ — ($5 \times 6 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

13. சகுனியின் சதி ஆலோசனை குறித்து எழுதுக.

14. தருமனின் குணநலன்களை விளக்குக.

15. பாரதிதாசனின் மொழிநடையினை நும் பாடப்பகுதியின் வழி எடுத்தியம்புக.

16. அன்னம் கதாபாத்திரத்தினை மதிப்பிடுக.

17. வள்ளுவரின் பெருமைகளாகத் தமிழன்பன் கூறுமாற்றைத் தொகுத்து எழுதுக.

18. இராமானுஜரின் சீர்திருத்தச் சிந்தனைகளை விளம்புக.

19. இராமானுஜரின் இளமைக்கால வாழ்வியலை எடுத்தியம்புக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. துகிலுரிதல் சருக்கச் செய்திகளை விவரிக்க.

21. பாரதியாரின் சொல்லாட்சியைப் பாஞ்சாலி சபதத்தின் வழி விளக்குக.

22. பாண்டியன் பரிசு – காப்பியத் திறனை ஆய்க.

23. தமிழன்பனின் கவிதைப் போக்கினையும் கருத்து வீச்சினையும் விவரி.

24. இராமானுஜரின் மனிதநேய மாண்புகள் என்னும் தலைப்பில் கட்டுரை வரைக.

———————